1978 மார்ச் 2]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய திட்டத்திற்கு நிதி வசதியில்லாத காரணத்தினால், இருக்கின்ற திட்டத்தையே அபிவிருத்தி செய்வது தான் இப்போது நான் சொன்ன திட்டம். அரசாங்கமே ஏற்று நடத்துவது என்பது, நாங்கள் தேர்தலிலே முன்னே அளித்துள்ள வாக்குறுதிக்கேற்ப, கிராமங்களுக்கு குடிதண்ணீர் அளிப்பது என்ற முறையிலே டைப் 1, டைப் 2 என்று போட்டிருக்கிறோம். டைப் 1 என்பது, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிதண்ணீர் இல்லாத கிராமங்கள்; டைப் 2 என்பது, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் தண்ணீர் இருக்கும், பட் நாட் பாட்டபுள். அதாவது குடிக்கக்கூடிய தண்ணீராக இருக்காது. உப்புத் தண்ணீராக இருக்கும். இந்தக் கிராமங்களுக்கு மட்டும் உடனடியாக அரசுச் செலவிலே குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பது என்பது இந்த அரசாங்கத்தினுடைய இப்போதைய திட்டம்.

பொற்கொல்லர்கள் பிள்ளைகளுக்கு பயிற்சி வகுப்புகள்.

*353 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சர்வீஸ் கமிஷன் ''குரூப் 4'' தேர்வில் கலந்துகொள்ளும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகளில் பொற்கொல்லர்களின் குழந்தைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென பொற்கொல்லர் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், அரசு எடுத்துக்கொண்ட முடிவு யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம்.

(ஆ) பொதுப்பணியாளர் தேர்வாணைக்குழுவின் ' குரூப் 4 ' தேர்வில் கலந்துகொள்ளும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைத் தவிர ஏனையோர் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை என்ற காரணத்தாலும், பொற்கொல்லர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளதாலும் இக் கோரிக்கை ஏற்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கப்படவில்லை என்பதற்கான காரணத்தை விளக்கியிருக்கிறார்கள். இந்த சர்வீஸ் கமிஷன் குரூப் 4 தேர்வில் தாழ்த்தப்பட்ட மக்களைத் தவிர, ஏனைய பொற்கொல்லர்களைத் தவிர, மற்ற மற்ற பிற்படுத்தப்பட்ட பிரிவுகளிலே உள்ளவதகளுக்கும் அத்தகைய வாய்ப்புக்களைப் பெற அரசு ஏதேனும் ந்ர்வி அளித்து வருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

[1978 மார்ச் 2

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது எந்தவிதமான உதவியும் அளிக்கப்படவில்லை. இனிமேல் இது போன்ற பிரிவினை துவக்குவதற்குப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. செல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு எந்தெந்த முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி நிலையங்களில் பொது அறிவு, கட்டுரை, சுருக்கி எழுதுதல், மொழி பெயர்ப்பு, நேர்முகத் தேர்வுக்கான பயிற்சி, மற்றும் தமிழ்நாடு தேர்வுக் குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற இதர துறைகளுக்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

திரு. எம். ஏ. ஜெயவேலு : தலைவர் அவர்களே, இந்தச் சலுகை நீட்டிக்கப்படுகின்ற நேரத்தில் கருமார், தச்சர் போன்றவர்களையும் இந்த அரசு சேர்த்துக்கொள்ள பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பின்தங்கியவர்களுக்கு நீட்டிக்கப்படுகின்ற நேரத்திலே, இவர்களும் அந்தப் பட்டியலிலே வருகின்ற காரணத்தினால், இது பரிசீலிக்கப்படும்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்வீஸ் கமிஷன் குரூப் 4-ல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்ற வகுப்புகளில், பொற்கொல்லர்களைத் தவிர மற்றும் பிற்பட்டவர்கள், மிகவும் பிற்பட்டவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள், எந்தெந்த இடங்களில் இந்தப் பயிற்சி கொடுக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அப்படி யாரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

திரு. வெ. கருணாமூர்த்தி: இந்தத் திட்டத்தின் கீழ், குரூப் 4-ல் எந்தெந்தப் பயிற்சி அளிக்கப்படுகின்றது? உதவித் தொகை ஏதேனும் அளிக்கப்படுகின்றதா? மதம் மாறிய கிருத்துவர்களுக்கும் இதிலே வாய்ப்பு அளிக்கப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, என்னென்ன பயிற்சி அளிக்கப்படுகின்றது என்று ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மாணவ

1978 மார்ச் 2]

ருக்கும் 45 ரூபாய் உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. மதம் மாறிய கிறித்தவர்களும் இந்தப் பயிற்சி வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. சி. பெ. காத்தமுத்து : தலைவர் அவர்களே, தாழ்த்தப் பட்டவர்களுக்கு குரூப் 4 பயிற்சி அளிப்பது போல், பிற்பட்ட மக்களுக்கும் இந்தமாதிரி பயிற்சி அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பின்தங்கிய மக்களும் எல்லாத் துறையிலும் முன்னேற வேண்டும், பொருளாதாரத்தில் பிற்பட்டவர்களும் முன்னேற வேண்டுமென்பதுதான் இந்த அரசின் கொள்கை. இந்த நல்ல ஆலோசனையை ஏற்று பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அவிநாசி வட்டத்தில் உழவு மாடுகள் வழங்கல்.

*354 வினா—திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவிநாசி தாலூகாவில் உள்ள அரிசனப் பொது மக்களுக்கு கடந்த 2 ஆண்டுகளாக உழவு மாடுகள் கொடுக்கவில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அவிநாசி தாலூகாவில் அரிசனப் பொது மக்களுக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளாக உழவு மாடுகள் கொடுக்கப்படவில்லை என்பது உண்மை.

திரு. சொ. ந. பழனிச்சாமி : அரிசனப் பெருங்குடி மக்களுக்கு உழவு மாடுகள் வழங்க அரசு மானியமாகக் கொடுக்கிறதா ? விவசாயச் சாமான்கள் வழங்கவும் மானியம் தரப்படுகிறதா ? அரசு கொடுக்கும் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க முன் வருமா ? ஒவ்வொரு தாலூகாவுக்கும் எவ்வளவு உழவு மாடுகள் வழங்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : உழவு மாடுகள் விவசாயம் செய்கிற ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு தொகை என்று ஒதுக்கப்படுகிறது. அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் யார் யாருக்கு வழங்கப்பட வேண்டுமென்று தேர்ந்தெடுத்து வழங்குகிற முறை நடைமுறையில் இருக்கிறது.